**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.**

**முன்னிலை : திருமதி. G. சுபத்திராதேவி., எம்.எல்.,**

**முதன்மை மாவட்ட நீதிபதி, கடலூர்.**

**2026-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 18-ஆம் நாள் சனிக் கிழமை**

**Tr.O.P. No.6/2024**

**(TN CD 01-000283-2024)**

1. சிவக்குமார்
2. சந்திரா .. மனுதாரர்கள்

/எதிராக/

1. சுந்தராம்பாள்
2. சுகந்தி
3. சுகுணா
4. கல்யாணசுந்தரம்
5. ஆனந்தி
6. மேலாளர், இந்தியன் வங்கி, ஸ்ரீமுஷ்ணம்.
7. சீத்தாலட்சுமி
8. பிரவீன்ராஜா
9. சாரதாபிரியா
10. வளர்மதி
11. சுசீலா
12. யோகலட்சுமி
13. இளவர் சேதுபதி

(13-வது இளவர் எதிர்மனுதாரருக்காக அவருடைய காப்பாளர் சுசீலா)

14. முருகானந்தம்
15. சிவராஜ்
16. முருகன்
17. கோவிந்தராஜ்
18. செல்வகுமார்

19. ராஜவேல்
20. மாலா
21. அலமேலு
22. சிவலிங்கம்
23. சுரேஷ்
24. அறிவழகி
25. செல்வவதி
26. புகழேந்தி
27. தமிழ்நாடு அரசுக்காக
மாவட்ட ஆட்சியர், கடலூர்.
28. வட்டாட்சியர்,
காட்டுமன்னார்கோயில்.
29. நில அளவை உதவி இயக்குநர்,
கடலூர். .. எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது என் முன்பு 15.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ராஜா.செல்வகுமார் அவர்களும், 14 முதல் 24 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.உமாபதி அவர்களும், 27 முதல் 29 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.கே.இராமன் அவர்களும் முன்னிலையாகியும், 7, 8, 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.வெங்கடேசன் அவர்கள் முன்னிலையாகியிருந்த போதிலும், 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததாலும், 7 முதல் 9 எதிர்மனுதாரர்களை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததாலும், 7 முதல் 9 எதிர்மனுதாரர்களைத் தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டும், வழக்கறிஞர் திரு.ஆர்.உமாபதி, 10 முதல் 13 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு வக்காலத்து தாக்கல் செய்வதாக கூறி குறிப்பாணை செய்தபோதிலும், 10 முதல் 13 வரையிலான

எதிர்மனுதாரர்களுக்கு வக்காலத்து தாக்கல் செய்யாததாலும், 10 முதல் 13 வரையிலான எதிர்மனுதாரர்களை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததாலும், 10 முதல் 13 வரையிலான எதிர்மனுதாரர்களைத் தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டும், எதிர்மனுதாரர்கள் 1 முதல் 6 மற்றும் 25 ஆகியோருக்கு அழைப்பாணை சார்வு செய்தும், இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால், எதிர்மனுதாரர்கள் 1 முதல் 6 மற்றும் 25 ஆகியோரைத் தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டும், 26-வது எதிர்மனுதாரர் இறந்துவிட்டபடியால், அவரைப் பொறுத்து, இம்மனுவின் நடவடிக்கையிலிருந்து (Given up) கைவிடப்பட்டும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்

**உத்தரவு**

காட்டுமன்னார்கோயில், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்கள்.2/2018, 3/2018, 4/2018, 5/2018, 6/2018, 7/2018, 8/2018, 66/2018, 63/2013, 70/2013 ஆகியவற்றை திரும்ப பெற்று, முரண்பாடான தீர்வுகள் காண்பதை தவிர்க்க, மேற்படி அசல் வழக்குகளை, விருத்தாசலம், கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.248/1992-ல் வழக்கிடை மனு எண்.191/2019 வழக்குடன் இணைத்து கூட்டு விசாரணையாகவோ (jointly) அல்லது ஒரே சமயத்திலோ (simultaneously ) நடத்தவும், வழக்கின் சூழ்நிலைகளுக்கேற்ப உரிய பரிகாரங்களை வழங்கியும் உத்தரவிடக்கோரி, மனுதாரர்கள் உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 24-ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

2. <u>மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம் பின்வருமாறு</u> :

இம்மனுவில் கண்டுள்ள 1,2 மனுதாரர்கள், இம்மனுவில் கண்டுள்ள 1 முதல் 4 எதிர்மனுதாரர்களால் முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.248/1992 அசல் வழக்கில் 2 மற்றும் 4 பிரதிவாதிகள் ஆவர். 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் பெற்ற முதல்நிலைத் தீர்ப்பாணைக்கு எதிராக, இந்த மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட A.S.No.1/1998 & A.S.No.62/1998 ஆனது மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் 06.08.2013 அன்று தள்ளுபடி செய்துவிட்டது. தற்போது, 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள், இறுதிநிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்ககோரி, மேற்படி அசல் வழக்கு எண்.248/1992-ல் வழக்கிடை மனு எண்.191/2019 தாக்கல் செய்து, அந்த மனுவானது தற்போது, விருத்தாசலம், கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இம்மனுவில் கண்டுள்ள மனுதாரர்கள் பல்வேறு அசல் வழக்குகளில் எதிர்கட்சியாடி வருகின்றனர். அதாவது, 14-வது மற்றும் 15-வது எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.2/2018 என்ற வழக்கிலும், 16-வது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.3/2018 என்ற வழக்கிலும், 17-வது மற்றும் 18-வது எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.4/2018 என்ற வழக்கிலும், 19-வது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.5/2018 என்ற வழக்கிலும், 20-வது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.6/2018 என்ற வழக்கிலும், 21-வது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.7/2018 என்ற வழக்கிலும், 22-வது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.8/2018 என்ற வழக்கிலும், 23-வது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.66/2018 என்ற வழக்கிலும், 24-வது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.68/2013 என்ற வழக்கிலும்,

25-வது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.70/2013 என்ற வழக்கிலும் எதிர்கட்சியாடி வருகின்றனர். மேற்படி அசல் வழக்குகள் அனைத்தும், காட்டுமன்னார்கோயில் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் இருந்து வருகின்றன. மனுதாரர்கள், விருத்தாசலத்திலிருந்து 35 கி.மீ. பயணம் செய்து, காட்டுமன்னார்கோயிலுக்கு சென்று மேற்சொன்ன அசல் வழக்குகளில், எதிர்கட்சியாடி வருகின்றனர். மேற்சொன்ன அனைத்து அசல் வழக்குகளிலும், ஒரே சொத்துக்களை பொறுத்து, ஒரே தரப்பினர்களிடையே பிரச்சனை எழுந்துள்ளன. மேற்படி அசல் வழக்குகளில் முரண்பாடான தீர்வு காண்பதை தவிர்க்க ஒரே நீதிமன்றத்தில் விசாரணை செய்வது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. எனவே, காட்டுமன்னார்கோயில், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் உள்ள மேற்சொன்ன அசல் வழக்குகளை திரும்ப பெற்று, விருத்தாசலம், கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.248/1992-ல் வழக்கிடை மனு எண்.191/2019 உடன் இணைத்து கூட்டு விசாரணையாகவோ அல்லது ஒரே சமயத்திலோ விசாரணை நடத்த உத்தரவிட வேண்டுமாய் மனுதாரர்கள் பிரார்த்திக்கிறார்கள்.

3. **<u>24-வது எதிர்மனுதாரர் தாக்கல் செய்த, 14 முதல் 23 வரையிலான எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு</u>** :

மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவானது நியாயமற்றது, சட்டப்படிக்கும், பொருண்மை படிக்கும் நிலை நிற்கத்தக்கதல்ல, தள்ளுபடி செய்யத்தக்கது. மனுதாரர்கள், 1992-ஆம் ஆண்டில் விருத்தாசலத்தில் அவர்கள் அசல் வழக்கு எண்.248/1992 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளதாக கூறியுள்ளனர். Tr.OP மனு தாக்கல் செய்த நாளிலிருந்து

இதுநாள் வரையில், இந்த எதிர்மனுதாரர்களை, மேற்படி அசல் வழக்கின் நடவடிக்கைகளில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. மேலும், காட்டுமன்னார்கோயில், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்குகளில், பிரதிவாதிகள் தரப்பு சாட்சிக்காக தொடங்கப்பட்டு, தற்போது வாதுரைக்காக உள்ளன. வழக்கின் நடவடிக்கைகளை தாமதப்படுத்தவும், எதிர்மனுதாரர்களை துன்புறுத்தவும், துர்லாபம் அடையவதற்காக மட்டுமே மனுதாரர்கள் தற்போது இந்த மாறுதல் மனுவினை தாக்கல் செய்துள்ளனர். இம்மனு நன்னம்பிக்கையற்றது மற்றும் உள்நோக்கம் கொண்டது. அசல் வழக்கு எண்.248/1992 -ல் உள்ள வாதிகள், இந்த எதிர்மனுதாரர்களுக்கு எதிராக எந்தப் பரிகாரமும் கோரவில்லை. தற்போது இத்தகைய மனுவைத் தாக்கல் செய்வது என்பது, அச்சுறுத்தும் ஒரு முயற்சியாகவும், எதிர்மனுதாரர்களிடமிருந்து சட்டவிரோதமான ஆதாயத்தைப் பெறும் நோக்கமாகவும் மட்டுமே உள்ளது. மனுதாரர்கள் வேண்டுமென்றே சாட்சிய விசாரணை தொடங்கும் கட்டம் வரை காத்திருந்து, அதன் பின்னரே இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்; சட்டமானது எந்த வகையிலும் இம்மனுதாரர்களுக்குத் துணை நிற்காது. வழக்கின் சமநிலை சம வாய்ப்பு இந்த எதிர்மனுதாரர்களிடம் உள்ளது. ஏனெனில், எதிர்மனுதாரர்கள் நல்ல எண்ணத்துடன் கிரையம் பெற்ற கிரையதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தான் சுவாதீனத்தில் இருந்து வருகின்றனர். இந்த மாறுதல் மனு உரிய காலத்தில் தாக்கல் செய்யப்படாததால், இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டியது. எனவே, இம்மனுவை அதிசபட்ச செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமாய் இந்த எதிர்மனுதாரர்கள் பிரார்த்திக்கிறார்கள்.

4. <u>**28-ஆம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த, 27 மற்றும் 29 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு**</u> :

மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு இந்த 27,28 மற்றும் 29 எதிர்மனுதாரரைப் பொறுத்து பொருண்மை ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் நிலைக்கத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரர்களை இந்த மனுவில் சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. வழக்கில், மனுதாரருக்கும், பிற எதிர்மனுதாரர்களுக்கும் அடையே உள்ள பிரச்சனையில் இந்த 27,28, 29 எதிர்மனுதாரர்களுக்கும் எந்த தொடர்பும் அக்கறையும் இல்லை. இந்த மனுவானது காலம் கடந்து வழக்கை வேண்டுமென்றே காலதாமதம் செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், விருத்தாசலம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட I.A.No.191/2019 in O.S.No.248/1992-ல் இந்த எதிர்மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை. மேலும், காட்டுமன்னார்கோயில், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கு எண்.70/2013 வழக்கில் மட்டும் தான் இந்த எதிர்மனுதாரர்கள் உள்ளனர். அந்த வழக்கிலும், இந்த எதிர்மனுதாரர்களுக்கு எதிராக எந்தப் பரிகாரமும் கோரவில்லை. ஆகவே, விருத்தாசலம், கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கில் இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பினர்களாக இல்லாத போது பிற வழக்குடன் சேர்த்து நடத்துவது நீதிமன்ற விதிகளுக்கு புறம்பானது. இவ்வழக்கானது வெவ்வேறு கட்ட நிலையில் உள்ளதால், இவ்வழக்குகளை ஒருசேர ஒரே நீதிமன்றத்தில் நடத்த வாய்ப்பில்லை. எனவே, இந்த மனுவினை தள்ளுபடி செய்யப்பட வேண்டும். மேலும், இந்த எதிர்மனுதாரர்கள் நீதிமன்றம் வழங்கும் எந்த உத்தரவுக்கும் கட்டுப்பட்டவர். எனவே, மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமாய் இந்த எதிர்மனுதாரர்கள் பிரார்த்திக்கிறார்கள்.

5. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, ஆவண சாட்சியமோ எதுவும் முன்னிடப்படவில்லை.

6. **இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனையாதெனில்** :

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**பிரச்சனை** :

7. காட்டுமன்னார்கோயில், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்கள்.2/2018, 3/2018, 4/2018, 5/2018, 6/2018, 7/2018, 8/2018, 66/2018, 63/2013, 70/2013 ஆகியவற்றை திரும்ப பெற்று, முரண்பாடான தீர்வுகள் காண்பதை தவிர்க்க, மேற்படி அசல் வழக்குகளை, விருத்தாசலம், கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.248/1992-ல் வழக்கிடை மனு எண்.191/2019 வழக்குடன் இணைத்து கூட்டு விசாரணையாகவோ (jointly) அல்லது ஒரே சமயத்திலோ (simultaneously ) நடத்தவும், வழக்கின் சூழ்நிலைகளுக்கேற்ப உரிய பரிகாரங்களை வழங்கியும் உத்தரவிடக்கோரி, மனுதாரர்கள் உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 24-ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். வழக்குகளை இடமாற்றுவதற்கு மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர்கள், விருத்தாசலத்திலிருந்து 35 கி.மீ. பயணம் செய்து, காட்டுமன்னார்கோயிலுக்கு சென்று மேற்சொன்ன அசல் வழக்குகளில், எதிர்கட்சியாடி வருவதாகவும், மேற்சொன்ன அனைத்து அசல் வழக்குகளிலும், ஒரே சொத்துக்களை பொறுத்து, ஒரே தரப்பினர்களிடையே பிரச்சனை எழுந்துள்ளதால், மேற்படி அசல் வழக்குகளில் முரண்பாடான தீர்வு காண்பதை தவிர்க்க ஒரே நீதிமன்றத்தில் விசாரணை செய்வது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது என்றும் கூறி, மனுப்படி உத்தரவாக வேண்டுமாய் பிரார்த்திக்கப்பட்டுள்ளது.

8. இம்மனுவிற்கு 14 முதல் 24 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர்கள் தங்கள் மனுவில், விருத்தாசலம் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.248/1992 ஆனது 1992-ஆம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருந்து வருகிறது என்று கூறியுள்ளனர் என்றும், இதுநாள் வரையில், இந்த எதிர்மனுதாரர்களை மேற்படி தாவா வழக்கு நடவடிக்கைகளில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்றும், மேலும், இந்த எதிர்மனுதாரர்களால் காட்டுமன்னார்கோயில், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் செய்யப்பட்ட தாக்கல் செய்த அசல் வழக்குகளில் பிரதிவாதி தரப்பு சாட்சிகள் ஆரம்பிக்கப்பட்டு, வாதுரை கட்டத்திற்கு வந்துவிட்டது என்றும், அசல் வழக்கு எண்.248/1992-ல் கண்டுள்ள வாதிகள் இந்த எதிர்மனுதாரர்களுக்கு எதிராக எந்தப் பரிகாரமும் கோரவில்லை என்றும், எதிர்மனுதாரர்களை அச்சுறுத்தி, துர்லாபம் அடையவே இதுபோன்ற மனுவினை தாக்கல் செய்துள்ளனர் என்றும், மனுதாரர்கள் வேண்டுமென்றே சாட்சி விசாரணைக்காக காத்திருந்து, அதன் பிறகு, இந்த மாறுதல் மனுவினை தாக்கல் செய்துள்ளனர் என்பதால், மனுதாரர்களுக்கு எந்த சட்ட உதவியும் கிடைக்காது என்றும், ஏனெனில், வழக்கின் சமநிலை வசதிவாய்ப்பு இந்த எதிர்மனுதாரர்களிடம் உள்ளது என்றும், மேலும், நல்லெண்ணத்துடன் கிரையம் பெற்ற கிரையதாரர்கள் என்றும், இந்த எதிர்மனுதாரர்கள் தான் சுவாதீனத்தில் உள்ளனர் என்றும், எனவே, மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கப்பட்டுள்ளது. மேலும், 27 முதல் 29 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பிலும், விருத்தாசலம், கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள I.A.No.191/2019 in O.S.No.248/1992-ல் 27 முதல் 29 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பினர்கள் இல்லை என்றும், மேலும், காட்டுமன்னார்கோயில், மாவட்ட

உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கு எண்.70/2013-ஐ, பிற வழக்குகளில் தரப்பினர்கள் அல்லர் என்றும், மேலும், வழக்குகளானது வெவ்வேறு கட்ட நிலையில் உள்ளதால், இவ்வழக்குகளை ஒருசேர ஒரே நீதிமன்றத்தில் நடத்த வாய்ப்பில்லை என்றும் ஆட்சேபணை செய்து, மனுவினை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமாய் பிரார்த்திக்கப்பட்டுள்ளது. மற்ற எதிர்மனுதாரர்கள் தோன்றாத் தரப்பினர்களாகக் கருதப்பட்டுள்ளனர்.

9. **இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. வழக்காவணங்கள் மற்றும் case status in ecourt service ஆகியவற்றைப் பரிசீலனை செய்யப்பட்டன**.

10. வழக்காவணங்களையும், case status in ecourt service ஆகியவற்றைப் பரிசீலனை செய்து பார்க்கும்போது, இம்மனுவில் கண்டுள்ள 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தங்களை 1 முதல் 4 வாதிகளாக கண்டு, இம்மனுவில் கண்டுள்ள மனுதாரர்கள் முறையே 2 மற்றும் 4 பிரதிவாதிகளாகவும், இம்மனுவில் கண்டுள்ள 5,6 எதிர்மனுதாரர்களை முறையே 5,6 பிரதிவாதிகளாகவும், ஒரு ராஜேந்திரன், பழனிவேல் ஆகியோரை 1, 3 பிரதிவாதிகளாகவும் கண்டு, வழக்குச் சொத்துக்களில் வாதிகளுக்குண்டான 31/63 பாகத்திற்கு முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கும்படிக்கும், மேற்படி முதல்நிலை தீர்ப்பாணையை அனுசரித்து இவ்வழக்கில் ஆணையர் ஒருவரை நியமித்து வழக்குச் சொத்துக்களின் நில இளப்பம் சரிக்கட்டி அளவெல்லை அறுதியிட்டு, வாதிகளுக்குண்டான 31/63 பாகத்தை பிரித்துக்கொடுப்பதற்கு அறிக்கை தாக்கல் செய்ய ஆணையிட்டும், அறிக்கையை பரிசீலித்து பாகம் பிரித்து இறுதிநிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கும்படிக்கும், வாதிகளுக்கு வழக்கிற்கு பின்னிட்ட மகசூல் ஆதாயம் உ.ந.ச. ஆணை 20, விதி 18-ன்படி கிடைக்க தீர்ப்பில் வகை செய்தும், வழக்குச் செலவு வாதிகளுக்கு

எதிர்வாதிகளிடமிருந்து கிடைக்கும்படிக்கும் மற்றும் இவ்வழக்கின் தன்மைக்கேற்ப இதர நியாயப் பரிகாரங்கள் வழங்கி தீர்ப்பளிக்கக்கோரி, விருத்தாசலம், சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.248/1992 தாக்கல் செய்து, மேற்படி அசல் வழக்கில் இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, முழுவிசாரணைக்கு பிறகு 17.04.1997 அன்று இம்மனுவில் கண்டுள்ள 1 முதல் 4 எதிர்மனுதாரர்களான வாதிகளுக்கு வழக்கு முதல் பின்னிணைப்பு பட்டியல் 106 முதல் 108 தவிர மற்ற இனச் சொத்துக்களிலும், 2-ஆம் பின்னிணைப்பு பட்டியல் சொத்துக்களில் 31/72 பாகம் உண்டென்று முதல்நிலைத் தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது என்பதும், மேற்படி முதல்நிலைத் தீர்ப்பாணையை எதிர்த்து, 3-ஆம் பிரதிவாதி பழனிவேல், A.S.1/1998 என்ற மேல்முறையீடும், 2-ஆம் பிரதிவாதி சிவக்குமார் A.S.62/1998 என்ற மேல்முறையீடும் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததில், மேற்படி மேல்முறையீட்டு வழக்குகளில், தரப்பினர்களோ, அவர்களது வழக்கறிஞர்களோ, ஆஜராகாததால், விசாரணை நீதிமன்ற தீர்ப்பாணையை ஊர்ஜிதம் செய்து, மேல்முறையீட்டு வழக்குகளை 06.08.2013 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதும், மேற்சொன்ன மேல்முறையீடுகள் நிலுவையில் இருந்தபோது, 1-வது பிரதிவாதி இறந்துவிட்டபடியால், அவரது வாரிசுதாரர்களாக அவரது மனைவி, மகன், மகள் ஆகியோர் முறையே 7 முதல் 9 எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்டும், அதேபோல் 3-வது பிரதிவாதி இறந்துவிட்டபடியால், அவரது வாரிசுதாரர்களாக அவரது மனைவி, மகள்கள் மற்றும் மகன் ஆகியோர்கள் முறையே 10 முதல் 13 எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்டு, மேற்படி அசல் வழக்கு எண்.248/1992-ல் 17.04.1997 அன்று பிறப்பிக்கப்பட்ட முதல் நிலைத் தீர்ப்பாணையை அனுசரித்து, வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து, மேற்படி ஆணையர் மனுச் சொத்துக்களில் (மனு முதல் பட்டியல் 106 முதல் 108 தவிர) இதரச் சொத்துக்களில் மனுதாரர்கள்/வாதிகளுக்குரிய

அதாவது 1-வது வாதிக்கு 1/72 பாகமும், 2 முதல் 4 வாதிகளுக்கு தலா 10/72 பாகமும் பாகித்தும், அதன்படி அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையருக்கு உத்தரவிட்டும், மனுச் சொத்துக்களில் (மனு பட்டியல் 106 முதல் 108 தவிர இதரச் சொத்துக்களில் மனுதாரர்கள்/வாதிகளுக்குண்டான 31/72 பாகத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்த காலமான 21.10.1991 முதல் மனுதாரர்கள்/வாதிகள் நீதிமன்ற ஆணை மூலம் சொத்து சுவாதீனம் அடையும் வரை இடைப்பட்ட காலத்திற்கு மகசூல் ஆதாயத்தை தீர்மானிக்கவும், அவ்விதம் தீர்மானிக்கப்படும் தொகைக்கு 2,3,7 முதல் 9 எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியமான சொத்துக்களின் பேரில் பற்றகை பாத்தியதை செய்திடவும், மனுச் செலவு மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர்களால் கிடைத்திடவும், இன்னும் இம்மனுவின் தன்மைக்கேற்ப இந்நீதிமன்றத்திற்கு யுத்தமாய் தோன்றும் இதர நியாயப் பரிகாரங்கள் வழங்கி தீர்ப்புரையும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டி, வழக்கிடை மனு எண்.191/2019 தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி இறுதிநிலைத் தீர்ப்பாணைக்கான வழக்கிடை மனு எண்.191/2019 விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்பதும் தெரிய வருகிறது. இம்மனுவில் கண்டுள்ள 1,2 மனுதாரர்கள் முறையே, அசல் வழக்கு எண்.248/92 வழக்கில் 2,4 பிரதிவாதிகள் ஆவர்.

11. மேலும், வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து பார்க்கையில், இம்மனுவில் கண்டுள்ள 14 மற்றும் 15 எதிர்மனுதாரர்கள் தங்களை 1,2 வாதிகளாக கண்டு, இம்மனுவில் கண்டுள்ள 2-வது மனுதாரரை, 1-ஆம் பிரதிவாதியாகவும், 5-வது எதிர்மனுதாரரை 2-ஆம் பிரதிவாதியாகவும், 1-ஆம் மனுதாரரை 3-ஆம் பிரதிவாதியாகவும், 7 முதல் 12 எதிர்மனுதாரர்கள் முறையே 4 முதல் 9 பிரதிவாதிகளாகவும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்களை முறையே 10 முதல் 13 பிரதிவாதிகளாகவும் கண்டு, விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்ற அசல்

வழக்கு எண்.248/1992-ல் வழக்கிடை மனு எண்.191/2019 -ல் கண்டுள்ள 12-வது அயிட்டச் சொத்தான ஸ்ரீமுஷ்ணம் கிராமத்தில் அயன் புஞ்சை சர்வே எண்.89/5-ல் 0.25 சென்ட் மற்றும் 13-வது அயிட்டச் சொத்தான சர்வே எண்.89/6-ல் 25 சென்ட் சொத்தை, வழக்கு சொத்தாக கண்டு, மேற்சொன்ன பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி, காட்டுமன்னார்கோயில், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.2/2018 தாக்கல் செய்துள்ளனர் என்பதும், அசல் வழக்கு எண்.2/2018-ல் கண்டுள்ள 1 முதல் 13 பிரதிவாதிகளும், இம்மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கு எண்.3/2018, 4/2018, 5/2018, 6/2018, 7/2018, 8/2018, 66/2018-களில் கண்டுள்ள 1 முதல் 13 பிரதிவாதிகளும் ஒரே பிரதிவாதிகள் ஆவர். இம்மனுவில் கண்டுள்ள 16-வது எதிர்மனுதாரர் தன்னை வாதியாகவும், மேற்சொன்ன 1 முதல் 13 பிரதிவாதிகளுக்கு எதிராக விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்ற அசல் வழக்கு எண்.248/1992-ல் வழக்கிடை மனு எண்.191/2019 -ல் கண்டுள்ள 12-வது அயிட்டச் சொத்தான ஸ்ரீமுஷ்ணம் கிராமத்தில் அயன் புஞ்சை சர்வே எண்.89/5-ல் 0.15 சென்ட் மற்றும் 13-வது அயிட்டச் சொத்தான சர்வே எண்.89/6-ல் 0.15 சென்ட் சொத்தை வழக்கு சொத்தாக கண்டு, மேற்சொன்ன பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி, காட்டுமன்னார்கோயில், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.3/2018 தாக்கல் செய்துள்ளார் என்பதும், இம்மனுவில் கண்டுள்ள 17 மற்றும் 18 எதிர்மனுதாரர்கள் தங்களை 1,2 வாதிகளாக கண்டு, மேற்சொன்ன 1 முதல் 13 பிரதிவாதிகளுக்கு எதிராக, விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்ற அசல் வழக்கு எண்.248/1992-ல் வழக்கிடை மனு எண்.191/2019 -ல் கண்டுள்ள 1-வது அயிட்டச் சொத்தான ஸ்ரீமுஷ்ணம் கிராமத்தில் அயன் புஞ்சை சர்வே எண்.88/2-ல் 0.33 சென்ட் சொத்தை, வழக்கு

சொத்தாக கண்டு, மேற்சொன்ன பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி, காட்டுமன்னார்கோயில், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.4/2018 தாக்கல் செய்துள்ளனர் என்பதும், இம்மனுவில் கண்டுள்ள 19-வது எதிர்மனுதாரர் தன்னை வாதியாகவும், மேற்சொன்ன 1 முதல் 13 பிரதிவாதிகளுக்கு எதிராக, விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்ற அசல் வழக்கு எண்.248/1992-ல் வழக்கிடை மனு எண்.191/2019 -ல் கண்டுள்ள 12-வது அயிட்டச் சொத்தான ஸ்ரீமுஷ்ணம் கிராமத்தில் அயன் புஞ்சை சர்வே எண்.89/5-ல் 0.15 சென்ட் மற்றும் 13-வது அயிட்டச் சொத்தான சர்வே எண்.89/6-ல் 14 சென்ட் சொத்தை, வழக்கு சொத்தாக கண்டு, மேற்சொன்ன பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி, காட்டுமன்னார்கோயில், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.5/2018 தாக்கல் செய்துள்ளார் என்பதும், இம்மனுவில் கண்டுள்ள 20-வது எதிர்மனுதாரர் தன்னை வாதியாக கண்டு, மேற்சொன்ன 1 முதல் 13 பிரதிவாதிகளுக்கு எதிராக, ஸ்ரீமுஷ்ணம் கிராமத்தில் அயன் புஞ்சை சர்வே எண்.88/1-ல் 0.20 சென்ட் சொத்தை பொறுத்து, மேற்படி 1 முதல் 13 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி, காட்டுமன்னார்கோயில், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.6/2018 தாக்கல் செய்துள்ளார் என்பதும், இம்மனுவில் கண்டுள்ள 21-வது எதிர்மனுதாரர் தன்னை வாதியாக கண்டு, மேற்சொன்ன 1 முதல் 13 பிரதிவாதிகளுக்கு எதிராக, விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்ற அசல் வழக்கு எண்.248/1992-ல் வழக்கிடை மனு எண்.191/2019 -ல் கண்டுள்ள 2-வது அயிட்டச் சொத்தான ஸ்ரீமுஷ்ணம் கிராமத்தில் அயன் புஞ்சை சர்வே எண்.88/3-ல் 0.11 சென்ட் சொத்தை வழக்கு சொத்தாக கண்டு, மேற்சொன்ன 1 முதல் 13 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர

உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி, காட்டுமன்னார்கோயில், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.7/2018 தாக்கல் செய்துள்ளார் என்பதும், இம்மனுவில் கண்டுள்ள 22-வது எதிர்மனுதாரர் தன்னை வாதியாக கண்டு, மேற்சொன்ன 1 முதல் 13 பிரதிவாதிகளுக்கு எதிராக ஸ்ரீமுஷ்ணம் கிராமத்தில் அயன் புஞ்சை சர்வே எண்.88/1-ல் 0.10 சென்ட் சொத்தை பொறுத்து, மேற்படி 1 முதல் 13 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி, காட்டுமன்னார்கோயில், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.8/2018 தாக்கல் செய்துள்ளார் என்பதும், இம்மனுவில் கண்டுள்ள 23-வது எதிர்மனுதாரர் தன்னை வாதியாக கண்டு, மேற்சொன்ன 1 முதல் 13 பிரதிவாதிகளுக்கு எதிராக விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்ற அசல் வழக்கு எண்.248/1992-ல் வழக்கிடை மனு எண்.191/2019 -ல் கண்டுள்ள 1-வது அயிட்டச் சொத்தான ஸ்ரீமுஷ்ணம் கிராமத்தில் அயன் புஞ்சை சர்வே எண்.88/2-ல் 0.10 சென்ட் சொத்தை வழக்கு சொத்தாக கண்டு, மேற்சொன்ன பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி, காட்டுமன்னார்கோயில், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.66/2018 தாக்கல் செய்துள்ளார் என்பதும், இம்மனுவில் கண்டுள்ள 24-வது எதிர்மனுதாரர் தன்னை வாதியாக கண்டு, 25, 26 எதிர்மனுதாரர்களை, 1,2 பிரதிவாதிகளாக கண்டு, விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்ற அசல் வழக்கு எண்.248/1992-ல் வழக்கிடை மனு எண்.191/2019 -ல் கண்டுள்ள 9-வது அயிட்டச் சொத்தான ஸ்ரீமுஷ்ணம் கிராமத்தில் அயன் புஞ்சை சர்வே எண்.89/1-ல் 0.8 சென்ட் மற்றும் 11-வது அயிட்ட சொத்தான சர்வே எண்.89/4-ல் 0.17 சென்ட் சொத்தை, வழக்கு சொத்தாக கண்டு, மேற்சொன்ன 1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி,

காட்டுமன்னார்கோயில், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.68/2013 தாக்கல் செய்துள்ளார் என்பதும், இம்மனுவில் கண்டுள்ள 25 மற்றும் 26 எதிர்மனுதாரர்கள் தங்களை வாதிகளாக கண்டு, இம்மனுவில் கண்டுள்ள 24-வது எதிர்மனுதாரரை 1-ஆம் பிரதிவாதியாகவும், 27 முதல் 29 எதிர்மனுதாரர்களை 2 முதல் 4 பிரதிவாதிகளாகவும் கண்டு, விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்ற அசல் வழக்கு எண்.248/1992-ல் வழக்கிடை மனு எண்.191/2019 -ல் கண்டுள்ள 9-வது அயிட்டச் சொத்தான ஸ்ரீமுஷ்ணம் கிராமத்தில் அயன் புஞ்சை சர்வே எண்.89/1-ல் 0.22 சென்ட் மற்றும் 11-வது அயிட்ட சொத்தான சர்வே எண்.89/4-ல் 0.08 சென்ட் சொத்தை, வழக்கு சொத்தாக கண்டு, மேற்சொன்ன 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தின் மீதான உரிமையை விளம்புகை செய்யக்கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், காட்டுமன்னார்கோயில், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.70/2013 தாக்கல் செய்துள்ளனர் என்பதும் தெரிய வருகிறது.

12. மேலும், விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள இறுதிநிலைத் தீர்ப்பாணைக்கான வழக்கிடை மனு எண்.191/2019 ஆனது, தற்போது எந்த கட்டத்தில் (Case Stage)-ல் உள்ளது என்று மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிட்டு கூறப்படவில்லை. மேலும், அசல் வழக்கு எண்கள்.2/2018, 3/2018, 4/2018, 5/2018, 6/2018, 7/2018, 8/2018, 66/2018, 68/2013 மற்றும் 70/2013 தாக்கல் செய்யப்பட்ட பிறகு தான், இறுதிநிலைத் தீர்ப்பாணைக்கான வழக்கிடை மனு எண்.191/2019 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன அசல் வழக்குகளின் சொத்துக்கள், இறுதிநிலைத் தீர்ப்பாணைக்கான வழக்கிடை மனு எண்.191/2019-ல் கண்டுள்ள 1,2,9,11,12 மற்றும் 13 அயிட்டச் சொத்துக்களில் அடங்கியுள்ளபோதிலும், இறுதிநிலைத் தீர்ப்பாணை கோரும்

1 முதல் 4 எதிர்மனுதாரர்கள், இந்த மாறுதல் மனுவினை தாக்கல் செய்யவில்லை. மேலும், மேற்சொன்ன அசல் வழக்கு எண்கள்.2/2018, 3/2018, 4/2018, 5/2018, 6/2018, 7/2018, 8/2018, 66/2018, 68/2013 மற்றும் 70/2013-ல் கண்ட வாதிகளுக்கு எதிராக எந்தப் பரிகாரமும் கோரவில்லை. மாறாக, மேற்சொன்ன அசல் வழக்குகளில், இறுதிநிலைத் தீர்ப்பாணை கோரும் 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள், 10 முதல் 13 பிரதிவாதிகளாக உள்ளனர். மேற்படி அசல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, சுமார் 5 ஆண்டுகளுக்கு பிறகு இந்த மாறுதல் மனுவினை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளனர். அசல் வழக்கு எண்.68/2013 மற்றும் அசல் வழக்கு எண்.70/2013-களில் இந்த மனுதாரர்கள் மற்றும் 1 முதல் 13 எதிர்மனுதாரர்கள் தரப்பினர்கள் அல்லர். மேலும், case status in ecourt service-ஐ நன்கு பரிசீலனை செய்து பார்க்கும்போது, காட்டுமன்னார்கோயில், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மேற்சொன்ன அசல் வழக்கு எண்கள்.2/2018, 3/2018, 4/2018, 5/2018, 6/2018, 7/2018, 8/2018, 66/2018, மற்றும் 68/2013- வழக்குகள் ஒரே சமயத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, வாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரையும் விசாரித்துக்கொள்ளாததால், பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, வாதிகள் தரப்பு வாதுரை கேட்கப்பட்டு, மேற்சொன்ன அசல் வழக்குகளில் தீர்ப்புரைக்காக 02.06.2026 அன்று வாய்தா வைக்கப்பட்டுள்ளது என்பதும், அசல் வழக்கு எண்.70/2013 ஆனது 16.04.2025 அன்று தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது. மேற்கண்ட சூழ்நிலையில், விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள இறுதிநிலைத் தீர்ப்பாணைக்காக தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.248/1992-ல் வழக்கிடை மனு எண்.191/2019 உடன், தீர்ப்புரைக்காக நிலுவையில் உள்ள காட்டுமன்னார்கோயில், மாவட்ட உரிமையியல் மற்றும்

நீதித்துறை நடுவர் நீதிமன்ற அசல் வழக்கு எண்கள்.2/2018, 3/2018, 4/2018, 5/2018, 6/2018, 7/2018, 8/2018, 66/2018, 68/2013 மற்றும் 70/2013-களுடன் கூட்டு விசாரணை நடத்தவோ அல்லது ஒரே சமயத்தில் விசாரணை நடத்தவோ இயலாது. ஆனால், எத்தரப்பினரும் மேற்சொன்ன ஏதேனும் ஒரு நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளில் தடை உத்தரவு பெற்று உரிய பரிகாரத்தை பெற்றுக்கொள்ளலாம். எனவே, மேற்கண்ட சூழ்நிலைகளில், இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் தீர்மானித்து, அவ்வாறே இம்மனுவில் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படுகிறது.

13. முடிவாக, இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரிடையாக உரைக்கப்பட்டு, அவரால் நேரிடையாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 18-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SUBATHIRA DEVI G

Digitally signed by SUBATHIRA DEVI G
Date: 2026.04.18 19:06:41 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.

**இணைப்பு** :

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

SUBATHIRA DEVI G

Digitally signed by SUBATHIRA DEVI G
Date: 2026.04.18 19:06:51 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.